**Consulate General of India**
**Jaffna**
**PRESS RELEASE**

# INTERNATIONAL DAY OF YOGA - 2018

The Consulate General of India in Jaffna in association with the Ministry of Education, Cultural Affairs, Sports and Youth Affairs of the Northern Province commemorated the fourth International Day of Yoga today (21.06.2018) with the participation of over two lakh students of the Northern Province, in a true reflection of the shared cultural heritage of Sri Lanka and India.

2. The Consulate organised special functions to mark the day in one school each in the five districts of the Northern Province of Sri Lanka with the officers of the Consulate personally leading the programmes in the district headquarters. At Vembady Girls High School in Jaffna, 1800 students, St. Theresa’s Girls College, Kilinochchi, 1000 students, Viththiyanantha College, Mullaitivu, 800 students, St. Xavier’s Girls’ College, Mannar, 1000 students and Saivapragasha Ladies College, Vavuniya, 1200 students participated in these special programmes.

3. Dr. Kandiah Sarveswaran, Hon’ble Minister of Education, Cultural Affairs, Sports and Youth Affairs of the Northern Provincial Council was the Chief Guest at the Vembady Girls High School in Jaffna while in other places, the District Heads of the Department of Education graced the occasion as Chief Guests. Minister Dr. Kandiah Sarveswaran performed *yogasnas* along with the students and promised to take steps to include yoga in the curriculum of schools.

4. The declaration by the Northern Provincial Council to observe the International Day of Yoga 2018 in all educational institutions in the Northern Province is unique this year. In his address, the Consul General Mr.S.Balachandran specially thanked the NPC for this declaration. The Consul General also agreed to provide training in Yoga to physical education teachers of the schools of the Northern Province of Sri Lanka.

5. The local channels telecast the Yoga demonstration programme today (21/6/2018) at Dehradun, India graced by Shri Narendra Modi, Hon’ble Prime Minister of India.

***

सत्यमेव जयते

# இந்திய துணைத் தூதரகம்
## யாழ்ப்பாணம்

## <u>ஊடக அறிக்கை</u>
## <u>சுர்வதேச யோகா தினம் - 2018</u>

யாழ் இந்திய துணைத் தூதரகம் வடமாகாண சபையின் கல்வி கலாச்சார விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சுடன் இணைந்து 21.06.2018 அன்று நான்காவது சர்வதேச யோகா தினத்தினை இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்களின் பங்குபற்றலுடன் வட மாகாணத்தில் கொண்டாடியது. இந்த உற்சாக பங்களிப்பு இலங்கை இந்திய ஒன்றிணைந்த கலாச்சார பாரம்பரியத்தை பிரதிபலிப்பதாக இருந்தது.

2. வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு பாடசாலைகளைத் தெரிவு செய்து தூதரக அதிகாரிகள் தலைமையில் யாழ் இந்திய துணைத் தூதரகம் விசேட யோகா நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தது. அந்த வகையில் யாழ்ப்பாணம் வேம்படி மகளீர் கல்லூரியிலும், வவுனியா சைவப்பிரகாச மகளீர் கல்லூரியிலும், முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியிலும், மன்னார் புனித சேவியர் பெண்கள் கல்லூரியிலும், கிளிநொச்சி புனித தெரேசா பெண்கள் கல்லூரியிலும் யாழ் இந்திய துணைத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நிகழ்வுகளில் பெருமளவிலான மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

3. யாழ்ப்பாணம் வேம்படி மகளீர் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கௌரவ வடமாகாண சபையின் கல்வி கலாச்சார விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி திரு கந்தையா சர்வேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மாணவிகளுடன் இணைந்து தானும் யோகாசனப் பயிற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டதுடன் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளில் யோகா கலையை உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். ஏனைய மாவட்டங்களில் அந்தந்த வலய கல்விப் பணிப்பாளர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டனர்.

4. வட மாகாண சபையானது வடமாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளிலும் சர்வதேச யோகா தினச் செயற்பாடுகள் இடம்பெற வேண்டுமென அறிவித்திருந்தமை சிறப்பானதொரு விடயமாகும். இந்திய துணைத் தூதுவர் திரு ச.பாலச்சந்திரன் அவர்கள் தனது உரையிலே இவ் அறிவிப்புக்காக வட மாகாண சபைக்கு தனது நன்றிகளைத் தெரிவித்ததுடன் வட மாகாண பாடசாலை உடற்கல்வி ஆசிரியர்களுக்கு யோகக்கலையை பயிற்றுவிக்க தாம் துணைபுரிவதாகவும் குறிப்பிட்டார்.

5. Dehradun, இந்தியாவில் கௌரவ இந்திய பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களால் இன்று (21.06.2018) வழங்கப்பட்ட யோகா செயன்முறையை உள்ளூர் ஊடகங்கள் நேரடியாக ஒலிபரப்புச் செய்தன.

***